**DINAMALAR Dt- 09.02.2017**

# Yet another feather to our cap!

An alumina of our school hails our school for the encouragement given by our Physical education department for her success in sports in the International Throw ball championship 2017.

## நல்லா விளையாடுங்க... மனம், உடல் நலம் பெறும்!

**கூறுகிறார் சர்வதேச எறிபந்து சாம்பியன்**



வினிதா

**கோவை • பிப். 9–**

''விளையாட்டு மன அமைதியை தந்து, உடல் ஆரோக்கியத்துக்கு வழிவகுக்கிறது,'' என, சர்வதேச எறிபந்து போட்டியில், வெற்றி பெற்ற கோவை வீராங்கனை வினிதா கூறினார்.

சர்வதேச அளவிலான எறிபந்து தேர்வு போட்டியில், தமிழகம் சார்பில் கோவை வீராங்கனை வினிதா தேர்வானார். இவர், ஐ.டி., நிறுவனத்தில் வேலை பார்க்கிறார். பி.எஸ்.ஜி.ஆர்., கிருஷ்ணம்மாள் மேல்நிலைப்பள்ளி மாணவியான இவருக்கு, உடற்கல்வி இயக்குனர் சுமதி அளித்த பயிற்சி, இன்று வரை வெற்றியை அள்ளித்தர உதவுகிறது.

தனது ஏழாம் வகுப்பிலிருந்து, மாவட்ட, மாநில, தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று, பல்வேறு பரிசுகளை பெற்றுள்ளார். கடந்த மாதம், 14, 15, 16 ஆகிய தேதிகளில், தாய்லாந்திலுள்ள, கசிம் பண்டிட் பல்கலையில் நடந்தது.

மாவட்ட எறிபந்து சங்கம் சார்பில், இந்திய அணியில் விளையாடி தங்கம் வென்றுள்ளார். இவரை, தமிழ்நாடு கோவை மாவட்ட எறிபந்து சங்கம் தலைவர் கருணாநிதி, செயலாளர் முத்து கிருஷ்ணன் உட்பட அனைவரும் பாராட்டினர்.

வீராங்கனை வினிதா கூறியதாவது:

ஐ.டி., துறை என்றாலே கம்ப்யூட்டருடனான வாழ்க்கை என்றாகி விட்டது. ஆகவே, நிறுவனங்கள் சார்பிலும் மனதை, 'ரிலாக்ஸ்' செய்து கொள்ள, அவ்வப்போது விளையாட்டு போட்டிகள் நடத்துவர். மனதையும், உடலையும் ஆரோக்கியப்படுத்தும் தூணாக மட்டும் விளையாட்டை பார்க்காமல், என் லட்சியமாக கருதுகிறேன்.

ஒவ்வொருவரும், பள்ளிப் பருவம் முதல் ஏதாவதொரு விளையாட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உடல் ஆரோக்கியம் மேம்படுவதோடு, மனமும் தெளிவாக சிந்திக்கும் ஆற்றல் பெறும்.

இவ்வாறு, அவர் கூறினார்.